இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 31-01-2024

# யு.ஜி.சி. உத்தரவில் அநீதி

உயர்கல்வி நிறுவனங்களில் பட்டியல் சாதி (SC), பழங்குடியினர் (ST), இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) இடங்களுக்குப் பொருத்தமான விண்ணப்பதாரர்கள் கிடைக்கவில்லை என்றால் பொதுப் பிரிவினருக்கு அவற்றைக் கொடுக்கலாம் என்று SC, ST மற்றும் OBC விண்ணப்ப தாரர்களுக்கான இடஒதுக்கீட்டை நீக்குவதற்கான வரைவு வழிகாட்டுதல் களை யு.ஜி.சி. வெளியிட்டுள்ளது.

**பொதுமக்களின் கருத்தை தெரிவிப்பதற்கான கடைசி தேதி ஜனவரி 28-ம் தேதியுடன் முடிவடைகிறதாம். இராமர் கோவில் விவகாரத்தில் மற்றவர் களை திசை திருப்பி மறைத்து விட்டு திரைமறைவில் பா.ஜ.க. செய்யும் அநீதி தான் இது.**

பல்கலைக்கழக மானியக் குழு வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டுதலில், “குரூப் ஏ பதவி, காலியாக இருக்க அனுமதிக்கப்படாவிட்டால், சம்பந்தப்பட்ட பல்கலைக்கழகம் பொது நலன் கருதி இந்த முன்மொழிவை தயாரிக்கலாம்” என கூறப்பட்டுள்ளது.

குரூப் சி மற்றும் குரூப் டி பதவிகளுக்கான இடஒதுக்கீட்டை நீக்குவதற்கான முன்மொழிவுக்கு பல்கலைக்கழக நிர்வாகக் குழு ஒப்புதல் அளித்தாலும், குரூப் ஏ மற்றும் பி பதவிகளுக்கு, இட ஒதுக்கீட்டிற்கான முன்மொழிவை கல்வி அமைச்சகத்திடம் சமர்ப்பிக்க வேண்டும் என இதில் தெரிவிக்கப்பட் டுள்ளது. இடஒதுக்கீடு பதவிகள் காலியாக இருந்தால், பல்கலைக்கழகங்கள் விரைவில் இரண்டாவது முறையாக ஆட்சேர்ப்புக்கு அழைப்பதன் மூலம் காலியிடங்களை நிரப்ப முயற்சிக்க வேண்டும் என்றும் வழிகாட்டுதலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**உயர்கல்வி நிறுவனங்களில் SC, ST மற்றும் OBC பிரிவினருக்கான இடஒதுக்கீட்டை நீக்கி, இட ஒதுக்கீட்டின் கீழ் போதுமான விண்ணப்பதாரர்கள் இல்லாத பட்சத்தில், அந்த இடங்களை பொதுப்பிரிவின் கீழ் நிரப்புவதற்கான, வரைவு வழிகாட்டுதல்களை பல்கலைக்கழக மானியக் குழு பரிந்துரைப்பது இதுவே முதல்முறை.**

ஒன்றிய அரசின் வேலைவாய்ப்புகளில் பட்டியல் இனத்தவர்க்கும் பழங் குடி இனத்தவர்க்கும் இடஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்பட்டு 75 ஆண்டுகள் ஆகிறது. இதர பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கான இட ஒதுக்கீடு நடை முறைப்படுத்தப்பட்டு 33 ஆண்டுகள் ஆகிவிட்டது. ஆனால் இவை முழுமை யான பலனைக் கொடுத்துவிட்டதா என்றால் இல்லை.

**இட ஒதுக்கீடு அமலாகி பல்லாண்டுகள் ஆகியும், IIT, IIM நிறுவன உயர் பதவிகளில் ஒதுக்கீடு முழுமையாக அமல்படுத்தப்படாத அநீதி தொடர்கிறது. இங்கெல்லாம் தரை மட்டத்தில்தான் இடஒதுக்கீடு தரப்படுகிறது. இந்தக் காலி யிடங்களை நிரப்ப சிறப்பு முயற்சி (special drive to fill the backlog vacancies) எடுப்பதற்கு பதிலாக, இடஒதுக்கீட்டையே ஒழித்துக்கட்டும் சூழ்ச்சியையே யு.ஜி.சி. செய்கிறது.**

உயர்கல்வி நிறுவனப் பணிகளுக்கு இடஒதுக்கீட்டுப் பிரிவினரில் தகுதி யானவர்கள் கிடைக்காவிட்டால், அந்தப் பணிகளை பின்னடைவுப் பணி யிடங்களாக அறிவித்து சிறப்பு ஆள்தேர்வின் மூலம் நிரப்புவதுதான் சமூக நீதியின் அடிப்படை ஆகும். ஆனால் தகுதியானவர்கள் இல்லை என்று அறிவித்து இட ஒதுக்கீட்டை ரத்து செய்வது இடஒதுக்கீட்டையே ரத்து செய் வதற்கான தந்திரம் ஆகும். அதனைத்தான் அப்பட்டமாகச் செய்ய நினைக் கிறார்கள்.

பொதுவாகவே சமூக நீதியைக் குழி தோண்டிப் புதைப்பதைத்தான் பா.ஜ.க. ஆட்சி தொடர்ந்து செய்து வருகிறது. 2021 ஆம் ஆண்டு ஜூலை 12ஆம் தேதி நீட் தேர்வு தொடர்பான அறிவிப்பை இந்திய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான் அறிவித்தபோது, இதர பிற்படுத்தப் பட்டோருக் கான இடஒதுக்கீடு இல்லாமலேயே தேர்வு நடைபெறும் என்று கூறியிருந்தார். உச்சநீதிமன்றத்திலும், உயர்நீதிமன்றத்திலும் வாதாடும் போது 27 சதவிகித இடஒதுக்கீடு தரமாட்டோம் என்று முதலில் சொன்னது பா.ஜ.க. அரசு. நாடு முழுவதும் எதிர்ப்பு வந்த நிலையில் ஒப்புக் கொண்டார்கள். அதிலும் உயர்வ குப்பு ஏழைகளுக்கு 10 விழுக்காடு என்பதில்தான் குறியாக இருந்தார்கள்.

பொருளாதார அளவுகோலை சமூகநீதியில் புகுத்தி, முன்னேறிய பிரிவு ஏழைகளுக்கு ஒரு இடஒதுக்கீட்டை பா.ஜ.க. அரசு கொண்டு வந்தது. பொரு ளாதாரத்தில் பின் தங்கியவர்க்கு, நிதி உதவிகள் செய்வதில் மாற்றுக் கருத்து இல்லை. அரசியல் சட்டமானது சமூக நீதிக்கான அளவுகோலாக சமூகத்தி லும், கல்வியிலும் பின் தங்கியவர்க்குதான் சிறப்பு சலுகைகள் வழங்குகிறது. பொருளாதாரத்தில் பின் தங்கியவர்களுக்கு அல்ல. இந்திய நாடாளுமன்றத் திலேயே ‘பொருளாதார அளவுகோல்’ என்ற கருத்து தோற்றது ஆகும். ஆனால் அந்தப் பொருளாதார அளவுகோலை கையில் எடுத்தது பா.ஜ.க.

**இடஒதுக்கீடு என்றாலே தகுதி போய் விட்டது, திறமை போய்விட்டது, ‘குறைஞ்ச மார்க் வாங்கினவா உள்ளே வந்துவிட்டா’ என்று குமைந்து கொண்டு இருந்தவர்கள், பொருளாதார இடஒதுக்கீடு தரப்பட்டதும் ‘சைலண்ட் மோட்’க்கு போய்விட்டார்கள். இப்போது யாரும் தகுதி போய்விட்டது, திறமை போய் விட்டது என்று பேசுவது இல்லை.**

சமூகநீதியில் நாம் அடைய வேண்டிய தூரம் மிகமிக அதிகம் ஆகும். சமூகநீதிக் காவலர் வி.பி.சிங் அவர்களது சிலைத் திறப்பு விழாவில் பேசிய தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், சமூகநீதி வரலாற்றில் நாம் அடைய வேண்டிய இலக்குகளை விரிவாகப் பட்டியலிட்டார். இதற் கிடையே ஏற்கனவே இருக்கும் இடஒதுக்கீட்டில் கை வைக்கிறது யு.ஜி.சி.

இந்த உத்தரவுக்கு கடுமையான எதிர்ப்பு எழுந்துள்ள நிலையில் அதனை திரும்பப் பெற்றுள்ளதாக தகவல்கள் வந்துள்ளன. இனி எந்தச் சூழலிலும் இதுபோன்ற விதிமுறைகள் வரக்கூடாது.

**இடஒதுக்கீட்டுப் பிரிவினரில் தகுதியானவர்கள் கிடைக்காவிட்டால், அந்தப் பணிகளை பின்னடைவுப் பணியிடங்களாக அறிவித்து சிறப்பு ஆள்தேர்வின் மூலம் நிரப்புவதை கட்டாயமாக்க வேண்டும். தகுதியானவர்களை உருவாக் காமல், தகுதி இல்லை என்று காரணம் சொல்வது மிகமிக அநீதியாகும்.**

## நாகை மாவட்டத்தில் வீடு கட்டும் திட்டச் செயல்பாடு தொடர்பாக

# ஆளுநர் ரவியின் ஊடகப் பதிவிற்கு புள்ளி விவரங்களுடன் பதில்!

## ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி அறிவிப்பு!

**சென்னை, ஜன. 31-**

**பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடுகள் கட்டுவது தொடர்பாக சில சொந்த கருத்துகளை தமிழ்நாடு ஆளுநர் ரவி தெரிவித்து இருந்தார். இது தொடர்பாக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி புள்ளி விவரங்களோடு அளித்துள்ள பதில றிக்கை பின்வருமாறு:**



நாகப்பட்டினம் மாவட்டம் வெண்மணி ஊராட்சியில் பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் 127 பயனாளிகளுக்கு வீடுகள் கட்ட அனுமதி வழங்கப் பட்டு இதுவரை 75 பயனாளிகள் வீடுகளை கட்டி முடித்துள்ளனர். மீதமுள்ள 52 பயனாளிகளால் வீடுகள் கட்டும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

நாகப்பட்டினம் மாவட்டத் திற்கு ஒன்றிய அரசால் 31,051 வீடுகள் மட்டும் வழங்கப்பட்டு 23,110 வீடுகள் பயனாளிகளால் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. மீத முள்ள வீடுகள் கட்டும் பணி நடைபெற்று வருகிறது.

**ஊரக குடியிருப்பு திட்டத்தில் மாநில அரசின் கூடுதல் பங்களிப்பு!**

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ், ஒரு வீடு கட்டுவதற்கு ஒன்றிய அரசு நிர்ணயிக்கப்பட்டுள்ள தொகை ரூ.1.20 இலட்சம் ஆகும். இத்திட்டத்தில் ஒன்றிய அரசு தன் பங்காக வீடு கட்ட 72 ஆயிரம் ரூபாய் மட்டுமே வழங்குகிறது. ஆனால், ஊரகப் பகுதிகளில் வசிக்கும் மக்களின் நலன் கருதி தமிழ்நாடு அரசு மாநிலத்தின் நிதி பங்களிப்பாக 1 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது.

இதனுடன் மகாத்மா காந்தி வேலை உறுதித் திட்டம் மூலம் ரூ.26,460 தூய்மை பாரத இயக் கம் மூலம் ரூ.12,000 உடன் சேர்ந்து தமிழ்நாட்டில் ஒரு வீட் டின் அலகுத் தொகை ரூ.2,78,460 ஆக உள்ளது. இந்தியாவிலேயே அதிக அளவாக தமிழ்நாட்டில் தான் பயனாளிகளுக்கு பிரதம மந் திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் வீடு கட்ட அதிக தொகை வழங்கப்பட்டு வருகிறது.

இவ்வரசு பதவியேற்றவுடன் 2,41,861 பயனாளிகளுக்கு வீடு கள் கட்ட அனுமதி வழங்கப்பட் டது. ஏற்கனவே அனுமதி வழங்கி முடிவுறாமலிருந்த வீடுகளையும் சேர்த்து 07.05.2021க்கு பின்னர் இதுவரை 2,93,277 வீடுகள் முடிக் கப்பட்டுள்ளன. இவ்வரசு பதவி யேற்ற நாளான 07.05.2021க்கு பிறகு அலகு தொகையாக ஒன் றிய அரசு நிதியிலிருந்து ரூ.2933.31 கோடி வரப்பெற்றுள்ளது. மாநில அரசு இத்திட்டத்திற்கு ரூ.3116.54 கோடி நிதி வழங்கியுள்ளது. இத் திட்டத்தின் கீழ், பயனாளிகள் விதிமுறைகளுக்கு உட்பட்டு முறையாக தேர்ந்தெடுக்கப்பட்டு, வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன.

**வெண்மணி ஊராட்சிக்கு ஒப்புதல் தராத ஒன்றிய அரசு!**

பிரதம மந்திரி ஊரக குடியிருப்புத் திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசால் ஊராட்சி வாரி யாக வீடுகள் வழங்க இலக்கு நிர் ணயம் செய்யப்படுகிறது. ஒன்றிய அரசால் இலக்கு நிர்ணயம் செய் யப்பட்டு தகுதி வாய்ந்த பயனா ளிகள் இல்லாத ஊராட்சிகளிலி ருந்து, தகுதி வாய்ந்த பயனாளிகள் அதிகமுள்ள ஊராட்சிகளுக்கு வீடுகளை மாற்றி வழங்க, ஒன்றிய அரசு ஒப்புதல் அளிக்காத கார ணத்தால், வெண்மணி போன்ற ஊராட்சிகளுக்கு இத்திட்டத்தின் கீழ் தேவைக்கேற்ப வீடுகள் வழங்க இயலவில்லை.

தற்போது தமிழ்நாடு அரசால் குடிசை வீடுகளுக்காக நடத்தப் பட்ட கணக்கெடுப்பில் நாகப் பட்டினம் மாவட்டம் கீழ்வேளூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட் பட்ட வெண்மணி ஊராட்சியில் மொத்தம் 66 குடிசை வீடுகள் தகுதி வாய்ந்தவையாக கண்டறி யப்பட்டுள்ளது. மேற்காணும் குடிசை வீடுகள் தமிழ்நாடு அர சின் ஊரக குடியிருப்பு திட்டம் மூலம் கான்கிரிட் வீடுகளாக இனி வரும் காலங்களில் மாற்றப்படும்.

**1970களிலேயே குடிசைகளை மாற்றிய கலைஞர் அரசு!**

மேலும் வீட்டுமனை இல்லாத ஏழை எளிய மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கி அவர்களுக்கு வீடுகள் கட்டி வழங் கியதும், தமிழ்நாடு குடிசை மாற்று வாரியத்தை (தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியம்) 1970களிலேயே உருவாக்கி நகர்ப் புரங்களில் குடிசையில் வசித்த வீடற்ற மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி வழங்கி யதும், ஊரகப்பகுதிகளில் கலை ஞர் வீடு வழங்கும் திட்டத்தை நடைமுறைப்படுத்தி எண்ணற்ற ஏழை மக்கள் பயனடைய வழிவ குத்ததும் முத்தமிழறிஞர் கலைஞ ரின் அரசு தான் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, எல்லோருக்கும் எல் லாம் என்ற கொள்கையுடன் தொடர்ந்து செயல்படும் இந்த திராவிட மாடல் அரசு, ஊரகப் பகுதி மக்களுக்கு தேவையான வீடு கட்டும் திட்டத்தினை தொடர்ந்து திறன்பட செயல்ப டுத்தும் என்பதை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் இ.பெரிய சாமி குறிப்பிட்டுள்ளார்.

## தமிழ்நாட்டுக்கு அதிக கெடுதல், கேடு நினைப்பவராகத் திகழும்

# ஆளுநர் ரவிக்கு ‘மீடியா மேனியா’ நோய் தாக்கியுள்ளதாகத் தெரிகிறது!

## அமைச்சர் எஸ்.ரகுபதி காட்டமான பதில்!

**சென்னை, ஜன. 31-**

**“கேரளம், தெலங்கானா, தமிழ்நாடு ஆளுநர்களுக்கு இடையே யாருடைய பெயர் ஊடகங்களில் அதிகம் வருகிறது என மறைமுகப் போட்டி நடக் கிறது” என சட்டத்துறை அமைச் சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரு மான எஸ்.ரகுபதி ஆளுநர் ஆர்.என்.ரவிக்கு பதில் அறிக்கை விடுத்துள்ளார்.**

அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

ஆளுநர் ஆர்.என்.ரவி அவர்களுக்கு ‘மீடியா மேனியா’ நோய் தாக்கி யுள்ளதைப் போலத் தெரி கிறது. தினந்தோறும் தன் னைப் பற்றி ஏதாவது ஒரு செய்தி வரவேண்டும் எனச் செயல்பட்டு வருகி றார். அதிலும் குறிப்பாகத் தென் மாநிலங்களில் உள்ள கேரள ஆளுநர் ஆரீப் முகமது கான், தெலங்கானா ஆளுநர் தமி ழிசை, தமிழ்நாட்டு ஆளு நர் ஆர்.என்.ரவி ஆகிய மூவருக்கும் தங்களுக்குள் யாருடைய பெயர் அதிக மாக மீடியாக்களில் வருகி றது என்ற மறைமுகப் போட்டியே இருப்பது போலத் தெரிகிறது. மாநில அரசின் மீது விமர்சனம் செய்து அதன் மூலம் ஊடக வெளிச்சம் பெறவே இத்த கைய செயல்களில் ஈடு பட்டு வருகின்றனர். மூவ ரும் தாங்கள் ஆளுநர் என்பதையே மறந்து, பா.ஜ.கட்சியால் அனுப் பப்பட்ட அந்தந்த மாநில செய்தித் தொடர்பாளர்க ளைப் போல நடந்து கொள்கிறார்கள்.

நேற்றைய தினம் நாகப் பட்டினம் சென்ற ஆளு நர், அதன் பிறகு ஒரு செய் தியை வெளியிட்டுள்ளார். நாகை மாவட்டத்தில் பிரதமரின் வீடு கட்டும் திட்டத்தைப் பற்றி விமர் சித்துள்ளார். வீடுகள் சரி யில்லை என்றும் இதற்குக் காரணம் தமிழ்நாடு அர சின்நிர்வாக அக்கறை யின்மை என்றும், ஊழல் என்றும் வாய்க்கு வந்த வார்த்தைகளைப் பயன் படுத்தி இருக்கிறார்.

அரசு திட்டத்தில் ஏதா வது விளக்கம் தேவைப் பட்டால் அது குறித்துக் கேட்டறியலாம். அதை விட்டு விட்டு எதிர்க்கட்சி யைப் போல மீடியாக் களில் விமர்சனம் செய்யக் கிளம்புவதுதான் ஒரு ஆளு நருக்கு அழகா? எந்த ஆதா ரத்தின் அடிப்படையில் ஊழல் என்று கூறுகின் றார்? வாய்க்கு வந்ததைப் பேசிடவும் எழுதிடவும் அவர் அட்ரஸ் இல்லாத ஆள் அல்லவே?

கீழ்வெண்மணி தியாகி கள் மணிமண்டபத்தை யும் கொச்சைப்படுத்தி இருக்கிறார் ஆளுநர். குடி சைகளுக்கு மத்தியில் கான் கிரீட் கட்டுமானம் கட்டி இருக்கிறார்களாம். இது தியாகிகள் மற்றும் ஏழை களுக்கு இழைக்கப்பட்ட கேலிக்குரிய அவமான மாம். ஐம்பது ஆண்டுக ளுக்கு முன்னால் நிலப்பிர புத்துவ ஜாதியவாத சக்திகளால் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட தியாகி களை நினைவுகூரும் வகையில் மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்ட் கட்சியால் எழுப் பட்ட நினைவுச் சின்னம் அது. அத்தகைய கொடூர சம்பவத்தில் கொல்லப் பட்ட தியாகிகளைப் போற்றும் வகையில்தான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அந்தச் சின்னத்தை அமைத்துள்ளது. இதில் என்ன குறை கண்டார் ஆளுநர்? சுற்றிலும் இருக் கிற குடிசைகளை அகற்றச் சொல்கிறாரா?

அயோத்தியில் இப் போது ஆயிரம் கோடியில் கோயில் கட்டி இருக்கி றார்கள். அயோத்தி நகர் இப்போது எப்படி இருக்கி றது என்பதை ஆளுநர் ஆர்.என்.ரவி ஒரு முறை அங்கு போய் பார்த்து விட்டு திரும்பட்டுமே. உலகத் தலைவர்கள் வரும் போது குஜராத் மாநிலத்து ஏழைகளின் வாழ்விடங் களை பச்சை ‘ஸ்கிரீன்’ போட்டு மறைத்ததை இந்த நாட்டு மக்கள் இன்னும் மறக்கவில்லை. எந்தப் பணிக்காக வந் தாரோ, அதைவிட்டு விட்டு அனைத்தையும் பார்த்துக் கொண்டு இருக் கிறார் ஆர்.என்.ரவி.



‘தமிழ்நாடு என்று சொல்லக் கூடாது, தமிழ கம் என்றுதான் சொல்ல வேண்டும்’ என்றார் ஆளு நர். வரலாற்றில் காலம் காலமாக இருக்கும் பெயரை மாற்றும் அதிகா ரத்தை இவருக்கு யார் கொடுத்தது என்று சொன் னதும், அதனைத் திரும் பப் பெற்றுக் கொண்டார் ஆளுநர். சில நாட்களுக்கு முன்னால், ‘மகாத்மா காந் தியால் இந்தியாவுக்கு சுதந் திரம் கிடைக்கவில்லை’ என்றார். அதற்கு எதிர்ப்பு கிளம்பியதும், ‘ நான் அப் படிச் சொல்லவில்லை’ என்று சொல்லி விட்டார்.

தமிழ்நாட்டுக்கு ஆளுந ராக வந்த ஆர்.என்.ரவி, தமிழ்நாட்டின் நன்மைக் காக இதுவரை ஏதாவது செய்துள்ளாரா என்றால் இல்லை. தனது அதிகாரத் தைப் பயன்படுத்தி ஒன் றிய பா.ஜ.க அரசிடம் இருந்து ஏதாவது திட்டங் களைக் கொண்டு வந்திருக் கிறாரா என்றால் இல்லை. குடும்ப வேலையாக அடிக் கடி டெல்லி செல்லும் அவர், தமிழ்நாட்டு மக்களின் கோரிக்கைக்காக எப்போ தாவது டெல்லி சென்றுள் ளாரா என்றால் இல்லை. அவர்தான், சொந்தமாக எந்த நன்மையும் செய்ய வில்லை. நாட்டு மக்க ளுக்கு நன்மைகள் செய் யும் தமிழ்நாடு அரசுக்கும், முதலமைச்சர் அவர்களுக் கும் உதவியாக இருக்கி றாரா என்றால் அதுவும் இல்லை. இடைஞ்சலாக வும், மாநிலத்துக்கு அதிக கெடுதல் செய்பவராகவும், கெடுதல் நினைப்பவராக வும் இருக்கிறார் ஆளுநர்.

**முறைகேட்டில் சிக்கியவரை காப்பாற்றத் துடிக்கும் ஆளுநர்!**

ஆன்லைன் ரம்மி தடைச் சட்ட மசோதா வுக்கு அனுமதி வழங்கா மல் இழுத்தடித்தது முதல், ஊழல் மற்றும் நிதிமுறை கேடுகளில் சிக்கிக் கைதான சேலம் பல்க லைக்கழக துணைவேந் தரைக் காப்பாற்றும் நடவ டிக்கைகள் வரை ஆளுந ரின் அனைத்து நடவடிக் கைகளும் சர்ச்சைக்குரிய தாக மட்டுமல்ல, சந்தே கத்துக்குரியதாகவும் அமைந்துள்ளன. தமிழ் நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றி அனுப்பி வைக்கப்பட்ட சட்ட முன் வடிவுகளையும், உத்தரவு களையும், கோப்புகளை யும் பல மாத காலமாக ஊறுகாய்ப் பானையில் ஊற வைப்பதைப்போல கிண்டி மாளிகையில் ஊற வைத்துக்கொண்டு இருக் கிறார். பொறுத்துப் பொறுத்துப் பார்த்து, தமிழ்நாடு அரசின் சார் பில் உச்சநீதிமன்றத்தில் வழக்குப் போட்டோம்.

**மன்னர் போல தன்னை நினைத்துக் கொள்கிறார்!**

“ஆளுநர் என்பவர் குடி யரசுத் தலைவரால் நியமிக் கப்படுபவர். அவர் பெயர ளவில்தான் மாநிலத்தின் தலைவராக இருக்கிறார். ஆளுநர் என்பவருக்கு அரசியல் சட்டப்படி சில அதிகாரங்கள் தரப்பட்டுள் ளன. அந்த அதிகாரங்களை வைத்து மக்களால் தேர்ந் தெடுக்கப் பட்ட சட்டப் பேரவைகள் சட்டமியற் றும் வழக்கமான பணி களை முறியடித்துவிட முடியாது” என்று உச்சநீதி மன்ற நீதிபதிகள் உறுதியா கத் தெரிவித்தார்கள். அதன் பிறகும் ஏதோ அதிகாரம் பொருந்தியவராக, தன்னை மன்னரைப் போல நினைத் துக் கொண்டு ஆளுநர் ரவி செயல்பட்டு வருகிறார்.

ஆளுநராக இருந்து அர சியல் செய்வதை விடுத்து, நேரடியாக அவர் அரசி யல் களத்துக்கு வரலாம். அவரது அந்த ஆசைக்கு அகில இந்திய பா.ஜ.க தலைமை அனுமதி அளித் தால், ‘அவருக்கும் நல்லது தமிழ்நாட்டு மக்களுக்கும் நல்லது’ என்பதைத் தெரி வித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி விடுத்துள்ள அறிக்கையில் குறிப் பிட்டுள்ளார்.




நாடாளுமன்றத் தேர்தல் குறித்து அண்ணா அறிவாலயத்தில் நடைபெற்ற தூத்துக்குடி மாவட்டக் கழக நிர்வாகிகளுடனான கலந்துரையாடல் கூட்டத்தில் தேர்தல் ஒருங்கிணைப்பு குழுவைச் சேர்ந்தவரும் அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார். இதில் நாடாளுமன்றத் தேர்தல் ஒருங்கிணைப்புக் குழுவினர் கழக முதன்மைச் செயலாளர் – அமைச்சர் கே.என்.நேரு, அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினரான – அமைச்சர் எ.வ.வேலு, அமைச்சர் தங்கம் தென்னரசு மற்றும் மாவட்டக் கழகச் செயலாளர்கள், அமைச்சர்கள் பி.கீதாஜீவன், அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் உள்ளிட்ட மாவட்டக் கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.